வளர்ச்சி மன்றங்கள் ஏற்கனவே கொடுத்து இருக்கக்கூடிய திட்டங்களுக்கு ஆகும் செலவே மிக அதிகமாக இருக்கிறது, என்ற காரணத்தால், இதன் மீது முடிவு எடுக்க சிந்திக்க வேண்டும்.

* 207 வினு—திரு. சு. துரைசாமி : மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினுக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருப்பூர் சட்டப்பேரவை உறுப்பினரிடமிருந்து திருப்பூர் நகராட்சிக்குட்பட்ட பாதைகள் நில அளவை செய்தல் குறித்து 10—9—1969, 6—2—1970 தேதிகள் இட்ட கடிதம் வந்துள்ளதா ?

(இ) ஆம் எனில், அதன் மீது எடுக்கப்பட்டுள்ள நடவடிக்கைகள் யாவை ?

மாண்புமிகு திரு. மா. முத்துசாமி : (அ) ஆம்.

(இ) அரசாங்கத்தின் பரிசிலனையில் உள்ளது.

திரு. சு. துரைசாமி : பேரவைத் தலைவரவர்களே, அமைச்சரவர்கள் அரசாங்கத்தின் பரிசிலனையில் இருப்பதாகத் தெரிவித்தார்கள். அது நீண்ட காலமாக இருப்பதால் விரைவில் நடவடிக்கை எடுக்கப்பட்டு பாதைகள் செப்பனிடுவதற்கு சர்வே செய்வதற்கு ஆவன செய்யவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு திரு. மா. முத்துசாமி : சர்வே செய்வதற்காக ஆகும் தொகையில் 3ல் 2 பங்கு பஞ்சாயத்தில் வசூல் செய்யவேண்டும். 40 தவணைகளில் செலுத்துவதாக முதலில் சொல்லப்பட்டது. 10 ஆண்டு சம பங்கில் கட்டுவதாக இப்போது கேட்கப்பட்டு இருக்கிறது. நகரசபை தனி அலுவலரின் ஒப்புதல் எதிர்பார்க்கப்படுகிறது. அதன் பின் நடவடிக்கை எடுக்கப்படும்.

Thaliyur Co-operative Society

* 208 *Q.*—DR. H. V. HANDE : Will the Hon. the Minister for Co-operation be pleased to state :

(*a*) whether a memorandum, dated 8th May 1968 signed by a number of M.L.As. and M.Ps was submitted to the Government urging action against the President of the Thaliyur Co-operative Credit Society (Coimbatore District);

(*b*) if so, the action taken thereon;

(*c*) whether in the said memorandum they prayed protection to those who detected the malpractices and reported to the Government; and

(*d*) if so, the action taken by the Government and the extent of protection given ?

1970 செப்டம்பர் 2]

மாண்புமிகு திரு. சி. பா. ஆதித்தனார் : (அ) ஆம்;

(இ) தாளியூர் பல நோக்கு கூட்டுறவு சங்கத்தின் முன்னாள் தலைவர் அச்சங்கத்தில் அவர்களால் கையாடல் செய்த தொகையைச் செலுத்திவிட்டார். அவர் மீது தொடர்ந்த கிரிமினல் வழக்கு வாபஸ் பெறப்பட்டது.

(உ) ஆம்.

(எ) அது போன்ற பாதுகாப்பு வழங்க வேண்டிய தேவை யேதும் ஏற்படவில்லை.

குடியாத்தம் வட்டக் கூட்டுறவு விற்பனை சங்கம்

* 209 வினா—திரு. வி. கே. கோதண்டராமன் : மாண்புமிகு கூட்டுறவுத் துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) குடியாத்தம் தாலூகா கூட்டுறவு மார்க்கெட்டிங் சொசைட்டியின் தலைவர் திரு. ஏ. என். செங்கையா அவர்கள், அதிகாரிகளின் ஊழலைப் பற்றி கனம் கூட்டுறவு அமைச்சர் அவர் களுக்கு 1—12—1969 தேதி எழுதிய புகார் கடிதம் சேர்ந்ததா ?

(இ) ஆம் எனில், அதன் பேரில் எடுக்கப்பட்ட நடவடிக்கை என்ன ?

மாண்புமிகு திரு. சி. பா. ஆதித்தனார் : (அ) திரு. ஏ. என். செங்கையாவின் 1—12—1969 தேதிய மனு வேலூர் துணைப் பதிவாளருக்கு வந்து சேர்ந்துள்ளது.

(இ) இந்த விஷயம் காவல் துறையினரின் விசாரணைக்கு அனுப்பப்பட்டுள்ளது.

திரு. வி. கே. கோதண்டராமன் : அந்த புகாரில் குறிப்பிட்டது போல் அந்தந்த அதிகாரிகள், சம்பந்தப்பட்டவர்கள் எந்த அளவுக்கு ஊழல் செய்து இருக்கிறார்கள். அந்த புகாரிலே கண்டுபிடிக்கப்பட் டுள்ள மேல் அதிகாரிகளே அதை நேரடியாக, ஆதாரபூர்வமாக கண்டுபிடித்ததாகவும் சொல்லப்பட்டபிறகும், நீண்ட நாளைக்கு பிறகு போலீசுக்கு தகவல் கொடுக்க தாமதம் ஏற்படுவதற்கான காரணம் என்ன ?

மாண்புமிகு திரு. சி. பா. ஆதித்தனார் : தலைவரவர்களே, சம்பந்தப்பட்ட அதிகாரிகள் மீது, வேலூர் வட ஆற்காடு மாவட்ட சூப்பிரண்டெண்டு ஆப் போலீசுக்கு புகார் செய்து இருக்கிறார்கள். 22—4—1970 அன்று புகார் செய்யப்பட்டு இருக்கிறது. அதன் மேல் போலீசார் நடவடிக்கை எடுத்து வருகிறார்கள். எந்தெந்த அதிகாரிகள் மீது நடவடிக்கை எடுப்பார்கள் என்று தெரியவில்லை. உரம் வாங்குவதிலே தவறுதல் நடந்தது. அதிகாரிகள், கோவாப்ப ரேடிவ் அதிகாரிகள், கண்டுபிடித்ததன் பேரில், புகார், முறைப்படி போலீசுக்கு போய் இருக்கிறது. அதன் மேல் மேற்கொண்டு நட வடிக்கை எடுக்கப்படும்.